**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் : திண்டுக்கல்**

முன்னிலை: திரு.கா.இன்பகார்த்திக், B.A., L.L.M.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திண்டுக்கல்.

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30–ம் நாள் திங்கட்கிழமை

சுருக்குமுறை வழக்கு எண்.801/2026

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் : | தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக<br>துணை இயக்குநர்,<br>தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,<br>திண்டுக்கல். |
| குற்றம் சாட்டப்படுபவர் பெயர் : | திரு.P,செல்வராஜ், வயது 42,<br>த/பெ. பத்மநாபன்,<br>மேலாளர்,<br>சகானா டெக்ஸ்டைல்ஸ்,<br>டிவிசன் ஆப் சகானா கிளாத்திங் கம்பெனி லிமிடெட், S.F.No.110.114 AB,<br>பித்தளைப்பட்டி, வத்தலகுண்டு ரோடு,<br>திண்டுக்கல். |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 30.06.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.எம்.விஜயேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.இளஞ்செழியன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீர்ப்புரை

**1. புகாரின் சுருக்கம் :–**

i. திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு ரோடு, பித்தளைப்பட்டி, SF.No.110–114 AB என்ற முகவரியில் சகானா டெக்ஸ்டைல்ஸ் டிவிசன் ஆப் சகானா கிளாத்திங் கம்பெனி இயங்கி வருகிறது. எதிரி மேற்படி

தொழிற்சாலையின் மேலாளர் ஆவார்.

I. கடந்த 24.10.2024ம் தேதி பகல் 10.00 மணியளவில், திருமதி.அன்னலட்சுமி என்பவர் கார்டிங் இயந்திரத்தின் (No.5) பின்பகுதியில் உள்ள மின்மோட்டாரையும், பல்சக்கரங்களையும் இணைக்கும் செயின் டிரைவ்வில் சிக்கியிருந்த பஞ்சை எடுக்கும்பொழுது, வலது கையின் விரல்கள் செயின் டிரைவில் சிக்கி விபத்து ஏற்பட்டதில், வலது கையின் ஆள்காட்டி விரல், நடுவிரல் மற்றும் மோதிர விரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டு, சிகிச்சையின்போது ஆள்காட்டி விரலின் முதல் பகுதி நீக்கப்பட்ட, நிரந்த ஏற்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்து 04.01.2025ம் தேதி பணிக்கு திரும்பியுள்ளார்.

ii. கடந்த 16.11.2024ம் தேதி பகல் 9.00 மணியளவில் சிவ்சங்கர் முண்டா மேற்படி தொழிற்சாலையில் நிறுவப்பட்டிருந்த Bale Press–ல் waste cotton–ஐ அமுக்கி பண்டல் செய்த பிறகு Bule Press–ல் உள்ள பிஸ்டனுடன் இணைந்துள்ள Loading Platform ஆனது கீழிருந்து மேல்நோக்கி சென்று கொண்டிருந்தபோது, மூடி வைத்திருந்த இரண்டு கதவுகளுக்கு இடையில் இருந்த இடைவெளியில் இடது கையின் முன்னங்கை பகுதியை இழுத்து பிடித்துக் கொண்டு பண்டல் செய்த Bale–ஐ இடது கையில் பிடித்துக் கொண்டு பண்டல் செய்த Bale–ஐ காலால் உதைத்துத் தள்ளும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, Loading Platform இடது கையின் புறங்கை மற்றும் மணிக்கட்டு பகுதியை நசுக்கி அடிபட்டு விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்தினால், அவருக்கு இடது கையின் புறங்கை மற்றும் மணிக்கட்டு பகுதியில் காயம் ஏற்பட்டு மணிக்கட்டு மற்றும் முன்கை பகுதியை மடக்க முடியாதபடி நிரந்தர ஊனம் ஏற்பட்டு சிகிச்சை முடிந்து 02.05.2025 அன்று பணிக்கு திரும்பியுள்ளார்.

iii. கடந்த 12.04.2024ம் தேதி பகல் 2.15 மணியளவில், திரு.தனபாலன் என்பவர் Humidification Plant–ன் தரையில் இருந்த இரும்பு கிரில் மீது நடந்தபொழுது நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி

விபத்தினால் அவருக்கு வலது கையின் முட்டிப் பகுதிக்கு மேல் பகுதியில் அடிபட்டு பாதிப்பு ஏற்பட்ட சிகிச்சை முடிந்து 12.06.2024 அன்று பணிக்கு திரும்பியுள்ளார். மேலும், 12.04.2025ம் தேதி பகல் 9.25 மணியளவில் திருமதி.இருளம்மாள் என்பவர் பாத்ரூமில் வழுக்கி விழுந்து ஏற்பட்ட விபத்தில் தண்டுவட எலும்பு மற்றும் தொடை எலும்பு ஆகியவற்றில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை முடிந்து குணமடைந்துள்ளார்.

iv. கடந்த 03.11.2025ம் தேதி பகல் 4.30 மணிக்கு செல்வி ஜான்சிராணி பிங்குவா என்பவர் Auto Coner பகுதியில் winding செய்த நூல் கண்டுகளை டிராலியில் வைத்த தள்ளிக் கொண்டு போகும்போது, அவருடைய இடது கால் மேற்படி டிராயில் இடித்து ஏற்பட்ட விபத்தில் இடது கணுக்கால் பகுதியில் அடிபட்டு, சிகிச்சை முடிந்து 03.01.2026ம் தேதி பணிக்கு திரும்பியுள்ளார்.

v. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, விதி 96(1)(2)ன் கீழ் நிரந்தர ஊனம் ஏற்படும் வாய்ப்புள்ள விபத்த ஏற்பட்ட தகவலை தொழிற்சாலையின் மேலாளர் உடனடியாக தொலைபேசி, தந்தி அல்லது தனிவபர் வாயிலாக திண்டுக்கல் தெழிலாக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விபத்தினை உறுதி செய்து அபாயகரமான நிகழ்வை உள்ளடக்கிய விபத்து அறிக்கை படிவம் 18–ஐ விபத்து நடந்த 12 மணி நேரத்திற்குள் திண்டுக்கல் தொழிலக ஆய்வாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

vi. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, விதி 96(4)ன் கீழ் தொழிற்சாலையில் ஒருவருக்கு விபத்து ஏற்பட்டு, அதனால் ஏற்பட்ட உடற்காயத்தினால் அவர் 48 மணி நேரம் வேலைக்கு வர இயலாவிட்டால் மேற்கண்ட 48 மணி நேரம் முடிவுற்று 24 மணி நேரத்திற்குள் ஆய்வாளருக்கு விபத்து தொடர்பான

அறிக்கை படிவம் எண்.18ல் தொழிற்சாலையின் மேலாளரால் அனுப்பி வைக்க வேண்டும்.

vii. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, விதி 96(6)ன் கீழ் தொழிற்சாலையில் ஒருவருக்கு விபத்து ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட உடற்காயத்தினால் ஊனத்துடனோ அல்லது ஊனம் ஏதுமின்றியோ 21 நாட்களுக்கு மேல் பணிக்கு வர இயலாவிட்டாலும் மற்றும் விபத்து ஏற்பட்ட அதனால் ஏற்பட்ட உடற்காயத்தினால் இழப்பீடு பெறும் அளவிற்கு ஊனம் ஏற்பட்ட பணிக்கு திரும்பினாலோ சம்பந்தப்பட்ட விபத்து நடந்த 28 நாட்களுக்குள்ளும், மேலும், சம்பந்தப்பட்ட நபர் பணிக்கு திரும்பும் வரை அடுத்த ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையும் விபத்து தொடர்பான கூடுதல் விவரங்களை படிவம் எண்.18B–ல் ஆய்வாளருக்கு தொழிற்சாலையின் மேலாளரால் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

viii. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 21(2) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 விதி 53 அட்டவணை–1 பாரா3(3)–ன் கீழ் தொழிற்சாலையில் நிறுவப்பட்டிருக்கும் கியர்கள், செயின்கள், Sprocker Wheel–கள் மற்றும் இவற்றை இணைத்த பயன்படுத்தும் அமைப்புகளுக்கு உரிய பாதுகாப்பு கவசம் அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

ix. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 விதி 61F–ன் கீழ் தொழிற்சாலையில் யாருக்கும் உடற்காயம் ஏற்படுத்தும் வண்ணம் எந்தவொரு பணிமுறையோ அல்லது வேலையோ செய்யக் கூடாது.

x. ஆனால், மேற்படி தொழிற்சாலையில் மேற்படி தேதிகளில் நடைபெற்ற விபத்து பற்றிய படிவம் 18, விபத்துகள் நடைபெற்று 21

நாட்களுக்குள் பணிக்கு திரும்பியவர் பற்றிய எழுத்து மூலமான அறிக்கை. விபத்து தொடர்பான கூடுதல் விபரங்கள் அடங்கிய படிவம் 18 மற்றும் படிவம் 18B ஆகியவற்றை உரிய காலத்தில் மேற்படி தொழிற்சாலையின் மேலாளரான எதிரி தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவில்லை. மேலும், தொழிற்சாலையில் நிறுவப்பட்டிருக்கும் இயந்திரங்களுக்கு உரிய பாதுகாப்பு கவசம் அமைக்காமல் பாதுகாக்கப்படாமல் வைத்துள்ளார். மேலும், தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உடற்காயம் ஏற்படுத்தும் வகையிலும் பணிகளை மேற்கொள்ளச் சொல்லி மேற்படி விதிகளை மீறி எதிரி செயல்பட்ட தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார். எனவே, திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அவர்கள் எதிரி மீது இத்தனிப் புகாரை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி புகாரானது இந்நீதின்றத்தில் சுருக்குமுறை வழக்கு எண்.801/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானதும், எதிரி மீதான தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92ன் படியான இவ்வழக்கு குற்றங்களின் சராம்சத்தை எதிரிக்கு விளக்கி கூறி வினவிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

3. புகார்தாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. புகார்தாரர் தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் u/s. 351(1)(b) BNSS பிரிவின் கீழ் வினவியபோது எதிரி, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் உண்மைதான் என்றும், குற்றத்தை ஒப்புக்

கொள்வதாகவும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ முன்னிடப்படவில்லை.

5. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அ.சா.1ன் சாட்சியத்தில் இருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களின் மூலமாகவும், புகார்தாரர் வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரியும் அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், எனவே, புகார்தாரர் வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரியை தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து தகுந்த தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

6. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் புகார்தாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு உண்மைதான் என்றும், எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும், இவ்வழக்கு குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு எதிரிக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

7. அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலிக்கையில், திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு ரோடு, பித்தளைப்பட்டி, SF.No.110-114 AB என்ற முகவரியில் அமைந்துள்ள சகானா டெக்ஸ்டைல்ஸ் டிவிசன் ஆப் சகானா கிளாத்திங் கம்பெனி இயங்கி வருகிறது என்பதும், மேற்படி தொழிற்சாலையில் மேற்படி தேதிகளில் நடைபெற்ற விபத்து பற்றிய படிவம் 18, விபத்துகள் நடைபெற்று 21 நாட்களுக்குள் பணிக்கு திரும்பியவர் பற்றிய எழுத்து மூலமான அறிக்கை. விபத்து தொடர்பான கூடுதல் விபரங்கள் அடங்கிய படிவம் 18B ஆகியவற்றை

உரிய காலத்தில் மேற்படி தொழிற்சாலையின் மேலாளரான எதிரி தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவில்லை என்பதும், மேலும், தொழிற்சாலையில் நிறுவப்பட்டிருக்கும் இயந்திரங்களுக்கு உரிய பாதுகாப்பு கவசம் அமைக்காமல் பாதுகாக்கப்படாமல் வைத்துள்ளார் என்பதும், மேலும், தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உடற்காயம் ஏற்படுத்தும் வகையிலும் பணிகளை மேற்கொள்ளச் சொல்லி மேற்படி விதிகளை மீறி எதிரி செயல்பட்ட தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பதும் 03.02.2026ம் தேதியன்று பகல் 10.00 மணியளவில் செய்த புலனாய்வின்போது கண்டறியப்பட்டள்ளது புலனாகிறது. மேலும், புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(b)ன் படி கேள்வி எழுப்பியபோது, அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் உண்மையென எதிரி ஒப்புக் கொண்டுள்ளார்.

8. அதன்படி, தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, விதி 96(1)(2), தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, விதி 96(4), தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, விதி 96(6), தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 21(2) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 விதி 53 அட்டவணை-1 பாரா3(3) மற்றும் தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 விதி 61F(2 எண்ணிக்கை)-க்க முரணாக செயல்பட்டும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92-ன் படி குற்றம் புரிந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

9. முடிவாக, எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 96(1)(2)ன் படி

குற்றவாளி என தீர்மானித்து, மேற்படி குற்றத்திற்கு **ரூ.5,000./-(ரூபாய் ஐந்தாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால் **ஒரு மாதம்** மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த சட்டப்பிரிவு 88(1)(3) தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 96(4)ன் படி குற்றவாளி என தீர்மானித்து, மேற்படி குற்றத்திற்கு **ரூ.5,000/-(ரூபாய் ஐந்தாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால், ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த சட்டப்பிரிவு 88(1)(3) தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 96(6)ன் படி குற்றவாளி என தீர்மானித்து, மேற்படி குற்றத்திற்கு **ரூ.5,000/-(ரூபாய் ஐந்தாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால், ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த சட்டப்பிரிவு 21(2) தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 53 அட்டவணை 1 பாரா 3(3)-ன் படி குற்றவாளி என தீர்மானித்து, மேற்படி குற்றத்திற்கு **ரூ.20,000/-(ரூபாய் இருபதாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால், மூன்று மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த சட்டப்பிரிவு 41 தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 61F(2 எண்ணிக்கை)-ன் படி குற்றவாளி என தீர்மானித்து, ஒரு எண்ணிக்கைக்கான குற்றத்திற்கு **ரூ.20,000/-(ரூபாய் இருபதாயிரம்)** வீதம் இரண்டு எண்ணிக்கைக்கு **ரூ.40,000/-(ரூபாய் நாற்பதாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால், ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் மூன்று மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

10. எதிரியால் செலுத்தப்படும் மொத்த அபராதத் தொகை **ரூ.75,000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம்)** தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டப்பிரிவு 3(2)(l)ன் படி தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிக்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

11. இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால், சொத்து குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026-ம் வருடம் ஜுன் மாதம் 30-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

INBAKARTHICK
Digitally signed by INBAKARTHICK
Date: 2026.06.30 17:37:09 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

அரசுத் தரப்புச் சாட்சிகள் :-

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.புகழேந்தி, துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திண்டுக்கல். |

அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:-

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஆய்வறிக்கை படிவம் |
| அ.சா.ஆ.2 | மேலாளர் மீதான காரணம் கோரும் அறிவிப்பு |
| அ.சா.ஆ.3 | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| அ.சா.ஆ.4 | மேலாளரின் பதில் கடிதம் |
| அ.சா.ஆ.5 | வாக்குமூலங்கள் |
| அ.சா.ஆ.6 | E.S.I Form - 12 |
| அ.சா.ஆ.7 | புகைப்படங்கள் |
| அ.சா.ஆ.8 | மேல்நடவடிக்கை தொடர்தல் குறித்த கடிதம் |
| அ.சா.ஆ.9 | வழக்கு அனுமதி ஆணை |

எதிரி தரப்பு சாட்சி, மற்றும் சான்றாவணம் : இல்லை

அரசுதரப்பு சான்றுப்பொருட்கள் : – இல்லை

பின் குறிப்பு:–

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK
Date: 2026.06.30 17:36:59 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.